# மெட்ரோ கழிப்பறைகளை இனி காலால் இயக்கலாம்

**சென்னை, செப். 30–**

மெட்ரோ ரயில் நிலையங்களில், கழிப்பறை குழாய்களை, காலால் இயக்கும் வசதி, அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக, பயணியர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பல்வேறு மின்னணு தொழில்நுட்பங்களை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

மின் துாக்கிகளில், கைளை பயன்படுத்தாமல், காலால் தொட்டு இயக்கும் வகையில், 32 நிலையங்களிலும், நவீன சாதனம் பொருத்தப்பட்டுள்ளது.

மேலும், நிலைய கழிப்பறைகளில், சுகாதார நடவடிக்கைகள் இருமடங்கு



மெட்ரோ ரயில் நிலையங்களில், கழிப்பறை குழாய்களை பயணியர் காலால் இயக்கும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்டுள்ளது.

கழிப்பறைகளில் உள்ள குழாய்களை இயக்க, கைகளை பயன்படுத்தாமல், காலால் இயக்கும் பொத்தான்கள், மெட்ரோ நிலையங்களில் உள்ள, 190 கழிப்பறைகளில் நிறுவப்பட்டுள்ளன.

இந்த வசதிகள், நாட்டிலேயே முதல் முறையாக, சென்னை மெட்ரோ நிலையங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.